02.03.2026 OS.No.170/2022 PW2 Name :.மஞ்சுநாதன்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கபட்டு குறுக்கு விசாரணை

1. என்ன நிவாரணத்திற்காக வாதி வழக்கு போட்டுள்ளார் என்பது எனக்கு தெரியும். பிரதிவாதி சுமதியிடமிருந்து ரூ.3,50,000/-த்தை திரும்ப பெறுவதற்காக வழக்கு போட்டுள்ளார். வாதியை எனக்கு அவருடைய கடைக்கு கோழி சப்ளை செய்த வகையில் பழக்கம். அவர் எனக்கு பக்கத்து ஊர்காரர். வாதியிடம் அவ்வப்போது பிரதிவாதி கடன் பணம் பெறுவதால் அதன்மூலம் பிரதிவாதியும் எனக்கு தெரியும்.
2. வாதி தனியாக நிதி நிறுவனம் நடத்துகிறார். அதை கோழி வியாபாரம் செய்யும் இடத்தில் மாதனூரில் நடத்துகிறார். வழக்கு சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் எனக்கு தெரியாது. பிரதிவாதியை சுமார் 1 1/2 ஆண்டுகளாக தெரியும். 2017 ஆண்டு முதல் தெரியும். 03.01.2019ல் வாதியிடம் ரூ.3,50,000/- பணத்தை பிரதிவாதி கடனாக பெற்றார். அதை வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கொடுத்தார். அது எல்லா ரூபாய் நோட்டுகளும் கலந்து இருந்தது குறிப்பாக என்னால் சொல்ல முடியாது. சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்துதான் பணம் கொடுக்கபட்டது.
3. தாவா கடன் தவிர வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையில் வேறு கடன் பரிவர்த்தணையும் உள்ளது. அதை பிரமாண பத்திரத்தில் கூறவில்லை. பிரதிவாதி மீது வேறு வழக்குகள் வேறு நீதிமன்றத்தில் உள்ளதா என்பது பற்றி எனக்கு தெரியாது. ரூ.3,50,000/- கடன் பணத்திற்கு ரூ.2 வட்டி

பேசபட்டது. பிரதிவாதி இதுநாள்வரை எவ்வளவு வட்டி கொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 9, 10 மாதங்கள் வட்டி கட்டியுள்ளதாக கூறினார்.

4. பிரதிவாதியின் கணவர் என்ன வேலை செய்கிறார் என்று தெரியாது. பிரதிவாதியின் முகவரி எனக்கு தெரியாது. கடன் தொடர்பாக பிரதிவாதி வாதி மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. அதன் பின்னிட்டு வாதிக்கு பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்பது பற்றி தெரியும். அந்த அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. அதற்கு வாதி தரப்பில் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு பற்றிய விவரம் தெரியாது. நீதிமன்றத்திலிருந்து சாட்சி சம்மன் எதுவும் வரில்லை. வாதி அழைத்ததால் சாட்சியம் கூற வந்துள்ளேன். வழக்கு பற்றிய விவரம் எதுவும் தெரியமால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 02/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.02 16:44:27 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.